

# FRIDAY SERMON

**18 JANUARY 2019**

**(11 JAMAD'UL AWWAL 1440 AH)**

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**
**MUNIR AHMAD AZIM**

## "THE "RUH" AND THE "NAFS"

## "றூஹ் மற்றும் நப்ஸ்"

**TAMIL VERSION / தமிழ் பதிப்பு**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

றூஹ் மற்றும் நப்ஸ் என்ற தலைப்பை அடிப்படையாக்கி, ஒரு விளக்கம் அளித்திட பல சீடர்களும் என்னை கேட்டுக் கொண்டதால், அதை குறித்து மிக முக்கியமான ஒரு விளக்கத்தை வழங்க இன்று நான் எண்ணுகிறோன். இது மிக முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆனால் மிக ஆழமானதுமான ஒன்றாகும். சில வருடங்களுக்கு முன்னால் இதைக்குறித்து நான் பேசியிருந்தேன். குறிப்பாக அப்துல் கஹ்பார் ஜன்பாஹ் சாஹிப் மற்றும் அவரது சீடரான மன்சூர் அஹமது

சாஹிப் ஆகியோருடன் 15 ஆகஸ்ட் 2011-ம் வருடம் நடந்த முபாஹலாவின் போது இதைக் குறித்து நான் பேசியிருந்தேன். மேலும் இதைகுறித்த ஒரு விளக்கத்தை உங்கள் முன்பாக நான் சமா்ப்பிக்கிறேன்.

சாதாரணமாக ஒருவா் "நான் என்னும் ஆணவத்தில் (ego) கவனம் செலுத்துகையில், இந்நபரில் வெளிப்படும் நிலைக்கு நாம் சாதாரணமாக பயன்படுத்தும் வாா்த்தையாகும் நப்ஸ். அது ஓரளவு உண்மையாகும். ஆனால் அதன் உண்மையான அா்த்தம் என்பது **"உடல் விருப்பம்," "நான் என்னும் எண்ணம்" மற்றும் "எல்லாவிதமான தீமைகளிலும் மூழ்கிய ஆன்மா"** எனலாம். நப்ஸே அம்மாரா: என்ற வாா்த்தையை சுருக்கமாக கூறுவேமேயானால் நப்ஸ், சில நேரங்களில் மனிதனின் "நான் என்னும் ஆணவத்தை" பிரதி பலிக்க செய்யும் ஒன்றாகும்.

அரபி மொழியில், மேலும் தெளிவாக கூறுவோமேயானால் திருக் குா் - ஆனின் சூழலில் நப்ஸ் என்ற வா்த்தையை மனித ஆன்மாவுக்கு பயன்படுத்தப்படுகிறது. சுய பண்புக்கும் அல்லது சுய இயல்புக்கும் இவ்வாா்த்தையினை பயன்படுத்துவதுண்டு. அது மனிதா்களுக்கும், வானவா்களுக்கும் அல்லது அல்லாஹ்வுக்கு கூட இவ்வாா்த்தையை பயன்படுத்துவதுண்டு. **"நாம் கூறுகின்றோம்," "நான்" "என்னை" "என்னையே"** இந்த அா்த்தத்தில் படைப்பாளன் தனக்கே இந்த வாா்த்தையினை பயன்படுத்தியிருக்கின்றான். அதாவது பிரதிபெயா்ச் சொற்களில்!. அதைப்போன்றே வானவா்களுக்கும், மனிதா்களாகிய நமக்கும் இவ்வாா்த்தையை பயன்படுத்தப்படுகிறது.

உதாரணமாக அல்லாஹ் திருக் குா்-ஆனில் கூறுகின்றான்.

**"நீா் உம்முடைய இறைவனைப் பணிவுடனும், அச்சத்துடனும் உம்முடைய உள்ளத்தில் நினைத்துக் கொண்டிருப்பீராக. (7:206)**

மேலும் அல்லாஹ் திருக் குா்-ஆனில் ஹஸ்ரத் மூஸா நபியைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான்

**"நான் உம்மை எனக்காகத் தோ்ந்தெடுத்துள்ளேன்" (20:42)**

மேல் சுட்டிக்காட்டிய வசனங்களில் காணலாம், இந்த முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தையை, அல்லாஹ் தனக்கே பயன்படுத்துகின்றான். நமக்கு தெரியும, நான் என்னும் அல்லாஹ்வின் ஆணவமானது (ego) நான் என்னும் அல்லாஹ்வின் ஆணவயின்மையினை (egoless) குறிப்பிடுகிறது. அல்லாஹ், படைப்புக்கும் படைக்கப்பட்டிருப்பதற்கும் அப்பால் நிலைகொள்ளுகின்றான். ஆயினும் அல்லாஹ் கூறுகின்றான். (லிநப்ஸீ - நானே, என்னையே) நிச்சயமாக அல்லாஹ் எவருக்கும் கணக்கு கொடுப்பவனல்ல. அவன் அவனது வார்த்தைகளை வெளிப்படுத்தி, அவனது முக்கியத்துவத்தை அவன் வலியுறுத்துகின்றான். அதனால் நமக்கு அவனை கர்வமுடையவன் என கூறமுடியாது. அவ்வாறு கூற நாம் தைரியம் காட்டுவதில்லை. அல்லது அவன் உலகெங்கும் நிரம்பியவனாக இருக்கின்றான் என்றும் கூற முடியாது. (அல்லாஹ் மன்னிப்பானக) எவரிடவும் எந்த கணக்கும் கொடுக்காமல், அவன் எண்ணுவதன்படி செயல்படுவதற்கான ஆற்றலுடைய ஒரேவொரு ஜீவன், அது அவன் மட்டுமாவான்.

அதனால்தான் நாம் படைப்பினமாகவும் அவன் படைத்தவானாகவும் இருக்கின்றான். அவனுடைய முன்அனுமதி இல்லாமல் எதையும் நமக்கு உருவாக்க முடியாது. அவன் விரும்புகின்றவர்களுக்கு அவன் அறிவை அளிக்கின்றான். அவன் விரும்புகின்றவர்களிடமிருந்து அறிவு மற்றும் சிந்தனை திறனை அவன் நீக்கி கொள்கின்றான்.

மடடுமல்லாது “றூஹ்” என்ற சொல் அறிவின் பொக்கிஷமாகும். “றூஹ்” என்பது மனிதனின் ஆன்மிகத்தன்மையுடன் இணைந்திருக்கின்றது. அது இறை வெளிப்பாடுகளை பெறும் மனத்திறனுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆன்மீக அளவிலும், பௌதீக அளவிலும் ஒரு இறை மனிதனாக பரிணமித்துக் கொள்வதற்கான திறன் மற்றும் தகுதியினை அவர்களிடம் அவன் பரிபூரணமாக ஏற்படுத்தியுள்ளான். அது மூலம் மனிதன் இறைவனின் நண்பனாகவும், பூமியில் அவனுடைய பிரிதிநிதியாகவும் மாறிவிடுகின்றான். அதனால்தான் தெய்வீக வெளிப்பாட்டின் சாராம்சத்தை அல்லது அதன் ஒளியை அல்லது அதன் ஆவியை அல்லாஹ் “றூஹில் குத்துஸ் (Ruh-il-Quddus - தூய ஆவி) என அழைக்கிறான். திருக் குர் - ஆனில் அல்பகரா 2:88, வசனத்திலும் மற்றும் 254-

ம் வசனத்திலும், அல்மாயிதா 5:111-ம் வசனத்திலும், அந்நஹ்ல் 16:103 வசனத்திலும் அல்லது றூஹில் அமீன் (அஸ்ஸுராஹ்) 26:194 – ம் வசனத்திலும் அதனை காணலாம்.

மட்டுமல்ல, திருக்குர் ஆனில் 53 – ம் அத்தியாயத்தில் றூஹில் குத்துஸ் இறங்குவதைக் குறித்து மிக அழகாகவும் வனப்பாகவும் விவரிக்கப்பட்டிருக்கிறது. அசாதாரணமான நிலையில் அல்லாஹ் தனது வெளிப்பாட்டினை அவன் தேர்ந்தெடுத்த தனது தூதருக்கு எவ்வாறு பகிர்ந்து வழங்குகின்றான் என்பதை விளக்குகின்றான். ஹதீஸுகளிலிருந்து நமக்கு உணர முடிகிறது, அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிகச்சிறந்த தரிசனத்தின் போது அதாவது இஸ்ராஜ் மற்றும் மிராஜ் நிகழ்வின் போது, அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தூய வெளிப்பாட்டின் மலக்காகிய ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் கீழ் வானத்திலிருந்து “சிதரத்துல் முன்தஹ” வரையில் பயணம் மேற் கொண்டதாக காணலாம். சூரத்தில் அந்ஜமிலிலிருந்து, அந்நிகழ்வு றூஹில் குத்தூசின் ஒரு பகுதி மட்டும் தான் என்றும் அது முழுமையானதல்ல என்றும் றூஹில் குத்தூசின் பல அற்புதங்களில் அது ஒன்று மடடும் தான் என்றும் நமக்கு உணர்ந்துக் கொள்ளலாம். அல்லாஹ்வின் வார்த்தைகளிலிருந்து அது தெளிவாகிறது. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றொரு முறைகூட அல்லாஹ்வை தரிசித்தார். அது “சித்ரத்துல் முன்தஹாவின்” அருகில் வைத்து என அல்லாஹ்வின் வார்த்தைகளிலிருந்து தெளிவாகிறது.

**“நிச்சயமாக அவர் மற்றொரு முறையும் அவனைக் கண்டார். மிகத் தொலைவிலுள்ள இலந்தைமரத்திற்குப் பக்கத்தில் அதன் அருகில் நிலையான தங்குமிடமாகிய தோட்டம் உள்ளது. மூடக்கூடிய ஒன்று இலந்தை மரத்தை மூடியபோது (அது நிகழ்ந்தது) (53:14-17)**

அல்லாஹ் கிருக்குர்- ஆனில் கூறுகின்றான். மனித இனத்தை படைத்த வேளையில் மேலும் குறிப்பாக கூறுவமேயானால், தனது பிரதிநிதியை (கலீ.்.பத்துல்லாஹ்) அனுப்பிவைப்பதன் மூலம் மனித குலத்திற்கு அல்லாஹ் தனது சிறப்புமிக்க நற்செய்தியினை அளிக்கின்றான்.

**“நான் அவனை முழுமையாக்கி, என் ஆவியை அவனுள் ஊதிய போது, நீங்களெல்லாரும் அவனுடன் சரம் பணிந்து விடுங்கள்” (15:30) (38:73)**

இது பற்றி மனிதனுக்கு மிக குறைந்த அறிவே வழங்கப்படடிருக்கின்றது.

**“அவர்கள் உம்மிடம் ஆன்மாவைப் பற்றி வினவுகின்றனர். நீர் அவர்களிடம் ஆன்மா என் இறைவனின் கட்டளையினால் படைக்கப்பட்டு உள்ளது. உங்களுக்கு அது பற்றி மிகக்குறைந்த அறிவே கொடுக்கப்பட்டுள்ளது.” ஏனக்கூறுக (17:86)**

அல்லாஹ் திருக்குர்-ஆனில் றூஹைப்பற்றி குறிப்பிடும்போதொல்லாம், தெய்வீக வெளிப்பாட்டின் உண்மையின்பால் நம் கவனத்தை அழைக்கின்றான். அதாவது அவனது அருகாமையில் நம்மை அழைக்கின்றான். மனிதனுக்கு ஒரு ஆன்மா உண்டு மட்டுமல்ல ஒரு றூஹும் உள்ளன. இந்த இரண்டு வார்த்தைகளில் உள்ள வித்தியாசத்தை உங்களுக்கு புரிய வைப்பதற்காக நான் வேறொரு தரத்தில் இதுப்பற்றி கூறுகின்றேன். நப்ஸினை நமக்கு சீர்திருத்தவும் முடியும், சீர்குலைத்திடவும் முடியும் ஆனால் றூஹினை நமக்கு சீரழித்திட முடியாது. திக்கிர், தொழுகை மற்றும் பிரார்த்தனை மூலம் மனிதன் அல்லாஹ்விடம் உறவை ஏற்படுத்திக் கொள்ளும் பொழுது, அவரது நப்ஸை, றூஹிடம் இணைத்துக் கொள்வதற்கான வழிவகுக்கப்படுகிறது. அதாவது அல்லாஹ் அருளுக்குரிய ஒரு உறவை அவரிடம் ஏற்படுத்துவதற்கான வழியினை திறக்கின்றான். அது மூலம் அவர் இறைவெளிப்பாடுகளை (வஹி), அல்லது தூயகனவுகளை (றுயா) அல்லது தரிசனங்களை (கஸ்பு) பெறுகிறார்.

நப்ஸினைப் பெறுத்தவரையில், அதாவது ஆன்மா அல்லது உள் உணர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாக சுத்திகரிக்கப்படும் போது, நப்ஸே அம்மாரா மெதுவாக, நப்ஸே லவ்வாமாவை சென்றடைகிறது. முடிவில் அவர் அல்லாஹ்விடம் முழுமையாக ஒரு உறவினை ஏற்படுத்திக் கொள்கிறார். அந்நிலையில் அல்லாஹ் தனது பரிசுத்த ஆவியை அவரிடம் நுழைய வைக்கின்றான். அந்த நிலையினை அடைந்த நபரை, அல்லது அந்த நிலையினை அடைந்த ஆன்மாவை, சாந்தியடைந்த ஆன்மா என கூறப்படுகிறது.

2011 ஆகஸ்ட் 15-ம் தேதியன்று இந்த குறிப்பிட்ட விஷயத்தில் (நப்ஸ் மற்றும் றூஹ்) அல்லாஹ் வழங்கிய செய்தி கீழ்வருமாறு.

இறைத்தூதரின் ஆன்மா சாந்தியடைந்த நிலையிலுள்ளது. பிறமக்களின் இதயங்களில் சாந்தியினை நுழையவைப்பதற்கான வழிமுறைகளை அவர் கற்பிக்கின்றார். உண்மையில், மனிதன் நான் என்னும் எண்ணத்தின் பல நிலைகளை கடந்து செல்ல வேண்டும். தனிப்பட்ட மற்றும் உள்ளுணர்வு தொடர்பான பல நிலைகளை தாண்டி செல்ல வேண்டும்.

அப்போதுமட்டும்தான் மனம் மற்றும் ஆன்மாவின் மிக அழகான உயரங்களை அவருக்கு அடைய முடியும். மனது பௌதீகமான உடலை வழி நடத்துகிறது. அதே சமயம் ஆன்மா, உடலுக்கு ஆன்மீக வழியினை காட்டுகிறது.

திருமறையில் அல்லாஹ் கூறுகின்றான்.

**“நிம்மதியடைந்த ஆன்மாவே! நீ உன் இறைவனிடம் திருப்தியடைந்தவாறும் அவன் உன்னிடம் திருப்தியடைந்தவாறும் அவனிடம் திரும்பி வருக. தேர்ந்தெடுக்கப்பட்ட என் அடியார்களுக்கிடையே நுழைந்துவிடுக (என உன் இறைவன் உன்னிடம் கூறுகின்றான். (89:28 – 31)**

மனிதமனதிற்கு புரிந்து கொள்ள முடியாத நிலையில் அல்லாஹ்விடமான உறவு மற்றும் ஒற்றுமை மூலம் ஆன்மா உயரத்தை அடைகிறது. உண்மையில் அது (மனம்) ஒரு அளவுவரையில் அதனை உணர்கிறது. ஆனால் அது தன்னுணர்வுடன் அல்ல. ஆன்மாவுக்கு அல்லாஹ்விடம் ஒரு சிறப்பான உறவு உள்ளன. அல்லாஹ்விடமிருந்துள்ள தெய்வீக அருள் நிறைந்த செய்திகள் அல்லது தெய்வீக கோபம் நிறைந்த செய்திகள் ஆகியவற்றை அது பெறுகிறது. ஆன்மாவை சுத்தம் செய்வதன் மூலம், ஒருஅளவுரையில் மனதையும் சுத்தம் செய்ய முடிகிறது. அதனை நாம் மனதை தூய்மைப்படுத்தல் என அழைக்கிறோம். தக்வ (பக்தி) இதய சாம்ராஜ்ஜியத்தை அடைந்து, இறை சித்தத்திற்கு அது கீழ்படிந்து, பரிசுத்த வாசனையினை அது தொடும் பொழுது, மனம் தூய்மையாகிறது. இறைவெளிப்பாட்டை பெறுவது ஆன்மாவாகும். இறை வெளிப்பாட்டினை பெறும் வேளையில் அல்லாஹ்விடம் தொடர்பு கொள்வது

ஆன்மா மட்டுமாகும். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நிகழ்ந்ததும் அதுவே ஆகும். அவருக்கு இறை தரிசனத்தின் வாசல் திறக்கும் பொழுது, அங்கு தனது ஆன்மா இறைவெளிப்பாட்டின் வெளிச்சம் மற்றும் அமைதியினை அடைந்து, அவ்வெளிச்சம் மற்றும் அமைதி அவரை தனது இறைவனிடம் அழைத்து சென்றது.

ஜிப்ரீல் (அலை) ஒரு நிலையில் இருந்து மற்றொரு நிலையினை அடைந்து முன் சென்றார், அதாவது எந்த ஓர் படைப்பினங்களுக்கும் அடைய முடியாத ஒரு நிலையில் அவர் சென்றடைந்தார். மலக்குகளுக்கு கூட அவ்விடத்தை சென்றடைய இயலாது. எனவே மலக்குகளுக்கு கூட தங்களது ஒளியான உடலால் சென்றடைய முடியாத அந்த இறை சன்னிதியில், அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பௌதீக உடலுடன் சென்றார் என்றும் தற்காலிகமான கண்களால் அக்காட்சியை தரிசித்தார் என்றும் உள்ள செய்தியை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? மனித மனதின் அபூரனமான பண்புகளுடன், அக்கருத்தை எவ்வாறு உட்கொள்ள முடியும்? மலக்குகளுக்கு ஆன்மாக்கள் இல்லை. ஆனால் அவர்களின் உண்மை என்பது இறை ஒளியாகும். ஏனெனில் அவர்கள் ஓரேயொரு தனித்துவத்தை மட்டுமே கொண்டுள்ளனர். அதேசமயம் மனிதனுக்கு இரண்டு வகையான தனித்துவம் உள்ளன. மனிதனுக்கு இரண்டு தரமான உலகில் நிலைநிற்க முடிகிறது. அதாவது இந்த தற்காலிகமான உலகிலும், ஆன்மீகமான உலகிலும் வாழ முடிகிறது. மனிதன் பூமியில் நடந்து மற்றும் வேலையில் ஈடுபபடும் போதும், உழைக்கும் போது, அவர் தற்காலிகமான இவ்வுலகில் வாழ்கிறார். அதேசமயம் அவர் தியானத்தில் ஈடுபடும் போதும், பிரார்த்தனை மற்றும் இறை எண்ணத்தில், தூங்கும் பொழுதும் அவர் ஆன்மீக உலகில் வாழ்கிறார்.

உடல் மற்றும் ஆன்மாவின் உதவியுடன் ஆன்மீகத்தை உணர முடிகிறது. ஆன்மீகம் என்பது நமது உள்ளுணர்வுடன் ஒரு உண்மையான தொடர்பை உருவாக்கி கொள்தலாகும். அது நம் கவனத்தை அல்லாஹ்விடம் அழைத்து செல்கிறது, அதாவது நம்மை படைத்தவனிடம் கொண்டு செல்கிறது. பல மதங்களும் ஆன்மீகம் என்னும் கருத்தை தங்களுக்கு ஏற்றவாறு வரையறுக்கின்றனர். ஆனால் உண்மை இதுவாகும், அவர்கள் தியானத்தில் ஈடுபடும் போது அவர்களின் உள்ளம் தரிசித்துக் கொள்வது எல்லாம் வல்ல ஏக

இறைவனையாகும். அது மூலம் அவர்கள் தங்களது வாழ்கையை ஏக இறை ஒளியால் நிறைத்துக் கொள்கிறனர். அல்லாமல், அல்லியாக்களுடையவோ (புனிதர்கள்) இறைத்தூதர்களுடையவோ (நபிமார்கள்), பீர்மார்களுடையவோ (துறவிகள்) உதவியால் அல்ல. ஏக இறைவனிடமிருந்து அவர்கள் ஒளியைப் பெற்றிருந்தும் துரதிர்ஷ்டவசமாக அவ்வொளி அவர்களின் பல தரப்பட்ட தெய்வங்கள் தங்களுக்கு வழங்கியது என அவர்கள் எண்ணுகின்றனர். அது மூலம் அவர்கள் குழப்பம் மற்றும் அவநம்பிக்கையில் வீழ்ந்து விடுகின்றனர். பின்னர் பெரிய அளவிற்கு அவநம்பிக்கையின்பால் அவர்கள் சென்று விடுகின்றனர். ஆனால் அவர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் பெறும் இந்த இறை ஒளியானது, எல்லாம் வல்ல ஏக இறைவனிடமிருந்து கிடைப்பதல்ல என்றும் அது அவர்கள் சுயம் படைத்த அல்லது அவர்களின் கற்பனையில் வாழும் இறைவனிடமிருந்து கிடைத்தது என்றும் அவர்கள் நம்பிக்கை கொள்கின்றனர்.

தெய்வீக வெளிப்பாடு என்பது சிதைக்கப்பட முடியாத ஒன்றாகிறது. அதே சமயம் சாத்தானிய வெளிப்பாடுகள் எளிதில் சிதைக்கப்படலாம். அதன் நிலை நிற்பு மிக குறைந்த காலமாகும். இறை வெளிப்பாடுகள் ஒரு வகையான ஒளியை கொண்டு வருகிறது. அது ஆன்மாவை வலுப்படுத்துவதுடன் நம் சுமைகளையாவும் அல்லாஹ்விடம் ஒப்படைக்க தூண்டுமளவிற்கு ஒரு மாற்றத்தை நமக்குள் ஏற்படுத்துகிறது. அது வழியாக தனது உண்மையான ஊழியருக்கு அமைதியினை அவன் வழங்குகின்றான் ஏனெனில், வானங்கள் மற்றும் பூமியினை படைத்த அந்த ஏக இறைவனிடம் மிக ஆழமான ஒரு உறவை அவ்வூழியர் அமைத்துகொள்கிறார். ஆன்மா சாந்தியடைகிறது. அது தன்னுணர்வில்லாத நிலையில் அல்ல! இந்த சாந்தியானது (அவரை) மேன்மேலும் முன்னேற்றமடைய வைக்கும் ஒரு கருவியாக மாறிவிடுகிறது. அது அவர் தனது அன்றாட வாழ்க்கையில் உணர்ந்து விடுகின்றார். அது அவர் எங்கு சென்றாலும் சரி, அவர் என்ன செய்துகொண்டிருந்தாலும் சரி அதனை அவர் உணர்ந்தவாறு இருப்பார். எனவே ஆன்மாவை ஏமாற்ற முடியாது. ஆனால் மனதை ஏமாற்றிவிடலாம். ஒருவரில் சாத்தானிய வெளிப்பாடுகள் இறங்கி கொண்டிருந்தால், அவர் மனம் அதன் உண்மையான நிலையில் நிலை கொள்ளாமல் இருந்தால், ஆன்மா அதனை பேணிக்கொள்ளவும் செய்தால்,

அந்நிலையில் ஆன்மாவை மனது முழுமையாக கீழ்படிய செய்யும். அது தீய மக்களை உருவாக்குகிறது. அதாவது அவர்களின் ஆன்மாவின் நிலையை மனது கடந்து செல்லும் பொழுது அவர்கள் எளிதில் சாத்தானிய தாக்குதல்களுக்கு உள்ளாகி விடுகின்றனர். இறை பண்புகள் அவர்களிடமிருந்து விலகி செல்கிறது. அதனால்தான், நன்மை மற்றும் தீமை ஆகிய இரண்டும் மனிதனிடமே இணைந்திருக்கின்றது என நாம் கூறுகின்றோம். அந்த இரண்டு அம்சமும் அவருடையதாகும். அவர்தான் தீர்மானிக்க வேண்டும். அத்தகைய தூண்டுதல்களை (நன்மை மற்றும் தீமை) எந்த திசையில் திருப்பி விட வேண்டும் என்பதைப்பற்றிய முடிவு எடுக்கவேண்டியது அவர்தான். அதனை தேர்ந்தெடுக்கும் உரிமை அவருக்கு உள்ளன. அதை குறித்து அவர் சுயம் பகுப்பாய்வு நடத்த வேண்டும். அதைப்புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். அது ஒரு தீமையான காரியமென்றால், அது அவரில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்பு, அவரை வழிதவற செய்வதற்கு முன்பு அதிலிருந்து அவர் விலகி செல்ல வேண்டும். அதாவது அந்த எண்ணத்திற்கு முடிவு கட்ட வேண்டும். மிக நல்ல மனிதர்களின் சீரழிவை கூட நாம் அடிக்கடி பார்க்கிறோம். ஒரு நபியின் தோழர் கூட அல்லது ஒரு இறை மனிதர் கூட சீரழிந்து விடலாம். அவர் பெற்று வரும் இறை ஒளி, தனக்குதானே கிடைக்கிறது என அந்த சீடர் எண்ணுகிறார். அவரது நபியை விட அதிகமாக அல்லாஹ் அவரை நேசிக்கின்றான் என அவர் எண்ணுகின்றார். ஏனெனில் அவருக்கு வெளிப்பாட்டின் ஒளி அந்த அளவிற்கு கிடைத்திருக்கின்றது. ஆனால் அது ஒரு தவறான படியாகிறது. அது அவரின் நித்தியமான அழிவிற்கு காரணமாகிறது.

ஒரு இறைத்தூதரில் காலத்தில், அவரின் விருப்பமானது அல்லாஹ் தனது ஒளியினை மக்கள் மீது பரப்பிக்கொள்ளவேண்டும் என்பதாகும். அது உண்மையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகும். அந்த ஒளியை அதாவது அந்த இறை வெளிப்பாட்டினை மக்கள் பெறுவதன் மூலம், இறைத்தூதருக்கு கிடைக்கும் வெளிப்பாடுகள் உண்மை என அவர்கள் உணர்ந்து விடுவார்கள். அவ்வாறேயானால் அம்மக்கள் இறைதூதரின் அருகில் வந்தடைந்துவிடவும் அல்லாஹ்வின் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு, அவர்களின் காலகட்டத்தில் தோன்றிய இறைத்தூதரிடம் உடன்படிக்கையில் (பை-அத்து) எற்பட்டுவிடவும் செய்வார்கள்.

அல்லாஹ்வின் தூதர் முன்னிலையில் மக்கள் பரிசுத்த ஆவியினை பெற்று பிரகாசிக்கின்றனர். இது இந்த தூதருக்கு ஆதரவாக விளங்கும் மிகப் பெரிய அடையாங்களில் ஒன்றாகும். சாதாரணமான மக்கள் கூட தீர்க்கதரிசனம் செய்யும் ஒரு காலம் வரும் என்று நற்செய்தி வாசகங்களில் எழுதப்பட்டிருக்கிறது. முந்தய தினங்கள் இதோ உங்கள் முன்னிலையில் வந்தடைந்திருக்கின்றது உங்கள் மத்தியில் ஒரு இறைத்தூதர் தோன்றியிருக்கின்றார். அந்த இறைத் தூதராகிய நான் முழு உலகினையும் சீரமைக்கும் பொருட்டு தோன்றியிருக்கின்றேன். என் வருகையின் நோக்கம் என்பது பிரச்சாரம் மற்றும் விளம்பரங்கள் செய்வதற்கல்ல மாறாக மக்களை அல்லாஹ்வின் வழியில் நடத்தி கொள்ள நான் தோன்றியிருக்கின்றேன். அதாவது தங்களை படைத்த இறைவனை புரிந்து கொள்ளவும் அவனை பிரத்தியேகமாக நேசிக்கவும், வணக்கத்தில் எந்த ஒரு பங்களியையும் அவனுக்கு இணைவைக்காமல் இருக்கவும் - போன்ற சீரமைப்பு அம்மக்களில் ஏற்படுத்த நான் தோன்றியிருக்கின்றேன்.

திருக் குர் - ஆன் வாயிலாக அல்லாஹ் வழங்கியுள்ள எல்லா கட்டளைகளுக்கும் கட்டுப்பட வேண்டும் என்பதும் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறையினை முழமையாக பின்பற்ற வேண்டும் என்பதும் தனது காலகட்டத்தில் தோன்றிய அல்லாஹ்வின் தூதருடன் சேர்ந்து அன்னாருக்கு கீழ்படிந்து வாழ வேண்டும் என்பதும் கட்டாயமாகும். இது ஒவ்வொருவரும் புரிந்திருக்க வேண்டும். இந்நூற்றாண்டில் வாழும் மக்களுக்கு ஒரு சாட்சியாக நான் தோன்றியிருக்கின்றேன். நீங்கள் எல்லோரும் அல்லாஹ்விடம்தான் கணக்கு கொடுக்க வேண்டும். என்னிடம் அல்ல! உங்களுடைய இதயங்களுக்கு மாற்றத்தை ஏற்படுத்த எனக்கு இயலாது. அல்லாஹ்வின் செய்தியை வழங்கி கொள்ளுதல் மட்டுமே எனக்கு செய்ய முடியும். எவருடைய இதயத்திற்கு ஒளியை வழங்க வேண்டும் என்பதை மிக நன்கு அறிந்தவன் அல்லாஹ் மட்டுமாவான். இறைவனிடம் தொடர்பு கொள்வதற்கு ஆன்மா தாகம் கொண்டால், அது முன்னோக்கி வர வேண்டும். அதன் உண்மையான நிலைநிற்பிற்காக அந்த குளத்தினை நோக்கி அதுவே குதிக்க வேண்டும். அப்போதுதான் ஆன்மா பிராகசிக்கும். அச்சூழலில் அல்லாஹ் அவனை அல்லது அவளை தனது தூதருடன் இணைத்து, தனது வழியில் பயன்படுத்துவான். மனம் ஏதோ சிலவற்றை விரும்புகிறது. ஆனால் உடல்

பலவீனமாக உள்ளது. சில வேளைகளில் மனதும் பலவீனமாக இருக்கும். ஆனால் ஆன்மா வலுவாக இருக்கும். ஆன்மா வலுவாக இருக்கும்பொழுது மனிதனின் பலவீனத்தை விலக்கிகொள்ள முடியும். அந்நேரம் ஒரு வேகமான வாகனத்தைப் போன்று மனம் இயங்கதுவங்குகிறது. அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றிடவும் அல்லாஹ்வின் தூதரிடம் இணைந்து செயல்படவும் அது ஆயத்தமாகிறது.

சமாதானத்தை அடைந்த ஆன்மாவானது, முழுமைபெற்ற றூஹின் பிரநிதியாக இயங்குகிறது. அமைதியடைந்த ஆன்மா, மனிதனை மேன்மேலும் நன்மை புரிய தூண்டுகிறது. அந்நிலையில் அவர் பரிபூரணமாக அல்லாஹ்வுக்கு கட்டுபட்ட அடியாராக இருக்கின்றார்.

“முத்மயின்னா” (Mutmaina) நிலையினை அடைவதற்கு அவர் அல்லாஹ்வின் வழியில் மிக நல்ல முறையில் சேவைகள் புரிய வேண்டும். ஈகோவின் வெவ்வேறு நிலையிலான சோதனைகளை அவர் கடந்து செல்ல வேண்டும். ஆன்மா என்பதன் சரியான அர்த்தம், **“இறை ஒளியை ஒருவர் பெறுகிறார்”** அதாவது **“இறை வெளிப்பாட்டை ஒருவர் பெறுகிறார்”** எனலாம் உண்மையில், வானவர்கள் மனிதர்களாக இருந்திருந்தால், வெளிப்பாட்டை கொண்டுவரும் வானதூதரை அல்லாஹ் நப்ஸ் என அழைத்திருந்திருப்பான். மேலும் ஒரு உண்மை எஞ்சுகிறது. அல்லாஹ் மிக தெளிவாக கூறுகின்றான். அதாவது “வெளிப்பாட்டின் மலக்கு” இறங்கும் என்பதற்கு அல்லாஹ் பயன்படுத்திய வார்த்தை “றூஹ்” இறங்கும் என்றாகும். (சூரா: அல்-கதிர்) அது வழியாக அல்லாஹ் மனிதனுக்கு மிக தெளிவாக சுட்டிக்காட்டுகிறான். அதாவது உங்கள் உடைமையின் கீழ் வருகின்ற றூஹ் என்பது இதுவே என அல்லாஹ் மனிதனை தெரிவிக்கின்றான். அத்தகைய நிலையில் அவர்கள் எந்த நேரத்திலும் தெய்வீக வெளிப்பாட்டை பெறுபவர்களாக இருப்பார்கள். அந்நிலையினை அடைய அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட்டுபட்டு வாழ வேண்டும். அவர்களின் அக்காட்டுபாட்டை அல்லாஹ் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் இந்த மாபெரும் அருளுக்கு அவர்கள் ஆளாகி விடுவார்கள்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு, வெளிப்பாட்டை கொண்டுவரும் ஜீப்ரில் என்னும் வானதூதரை விட மேன்மை இருந்தது. அந்த

உண்மையை மிக தெளிவாக புரிந்துக் கொள்ளலாம் அவர் நப்ஸே முத்மயின்னா (Nafs-e-Mutmaina) வின் பரிபூரணமான கட்டத்தை கடந்து சென்றிருந்தார்.

அன்னாரின் “ஆன்மாவும்” அன்னார் வெளிப்படுத்திய “நப்ஸும்” ஒருங்கிணைந்து செயல்ப்பட்டது. மனதும் ஆன்மாவும் ஒருங்கிணைந்து செயல்படும் அத்தகைய உயரிய நிலையினை வேறு எந்த மனிதனுக்கு அடைய முடியாது. (நான் எனும் எண்ணத்தை முழுமையாக பணியவைத்த நிலை) பிற இறைத்தூதர்களுக்கும் இந்நிலையினை அடையலாம். ஆனால் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவ்ர்ள் அடைந்த அதே நிலையினை அடைய இயலாது. அன்னாரின் அந்த உயரிய நிலை என்றென்றும் நிலை நிற்கும். அந்த உண்மையை அல்லாஹ் இவ்வாறு எடுத்துரைக்கின்றான். **“நீர் உயரிய பண்புகளைக் கொண்டவராக இருக்கீன்றீர.”** நான் எனும் எண்ணத்தை முழுமையாக சுத்திகரிக்கப்படுவதன் மூலம்தான் இந்த உயரிய குணத்தை ஒருவருக்கு அடைமுடியும். அந்நிலையில் அவரின் உள் உணர்வு இறைவிருப்பத்திற்கு கட்டுபட்டு இயங்க ஆரம்பக்கின்றது. இப்பூமியில் அவரது நிலை நிற்பின் அடிப்படையும் அதுவாக மாறுகிறது. மற்றொரு வார்த்தையால் கூறுவோமேயானால், உண்மையில் அது இறை விருப்பம் மற்றும் இறை விதிக்கு கீழ்படிந்து கொள்ளுதல் ஆகும்.

வானதூதர்கள், நப்ஸ் மற்றும் ரூஹினை கொண்டிருக்கவில்லை. ஆனால் ஒரு சிறப்பான நிலையில் உள்ள ரூஹ் அவர்களுக்கு உள்ளன. ஆனால் அந்த நப்ஸ் மனிதர்களிடம் மறைந்து இருக்கிறது. அதனை வெளியே கொண்டு வந்து, வைரத்தை போன்று நாம் பளபளப்பாக மாற்றிட வேண்டும். அவ்வாறேயானால் அது அல்லாஹ்வின் பார்வையில் விலை வாய்ந்த ஒன்றாக மாறிவிடும். சாத்தான் மனிதனின் மிகுந்த எதிரியாக இருக்கிறான். அவனுடைய இராணுவம் நம்மிடம் இறங்கிய நிலையில் உள்ளது. நாம் பெறும் தெய்வீக நீரிலிருந்து நம்மை வெளியேற்றுவதற்கு நம் இரத்தத்தில் அவன் கரைந்து விட்டான். எவர் ஒருவர் தனது நப்ஸ் மற்றும் ரூஹினை சீரமைத்துக் கொள்ளவில்லையோ, அதாவது இறை அமைதியினை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் எவர் ஒருவர் தனது நப்ஸ் மற்றும் ரூஹினை இயங்க வைப்பதில்லையோ அவர் மீது

சாத்தானும் அவனுடைய படையும் வெற்றியடைந்து விடும். அமைதி, மனிதனை இறைவனிடம் அழைத்து செல்கிறது. அமைதி இல்லாமல் நம்பிக்கை வேரூன்றுவதில்லை. அந்நிலையில் அல்லாஹ்வின் புத்தகத்திலிருந்து. (குர்-ஆன்) ஞானத்தை பெறவும் முடியாது. தனது இலக்கை எட்டவும் முடியாது அதனால்தான், அல்லாஹ் ஸூரத்துல் கத்திரில் கூறுகின்றான். **"சாந்தி நிலவியிருக்கும். அது விடியற்காலை உதயமாகும் வரை இருக்கும்."**

சாதாரணமாக இரவில் தூங்கும் போது அமைதியான நிலை ஏற்படுகிறது. அப்பொழுது இவ்வுலகில் என்ன நிகழ்கின்றது என்பதை அவருக்கு உணர்ந்துக் கொள்ள முடியாது அவரது அன்றாட வாழ்க்கை விவகாரங்களையும் அவருக்கு உணர ஆகாது. ஆனால் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சமாதானம் என்னவென்றால், அல்லாஹ்வின் அடியார் எதுவொன்றை கண்டறிந்து விட்டாலும் சரி, எந்த நிலைமையில் இருந்தாலும் சரி, அல்லாஹ்விடமிருந்து வரும் இந்த சாந்தியின் உரிமையாளர் அவர்தான். இந்த சாந்தியினை அல்லாஹ் அவருக்கு வழங்கி கொண்டால், இப்பூமியில் அவருக்கு மிக நல்ல முறையில் நடந்துக்கொள்வதற்கும் தனது கடமை மற்றும் நம்பிக்கையினை நிறைவேற்றுவதற்கும் தனது சுமைகளையாவும் அல்லாஹ்விடம் ஒப்படைத்து கொள்வதற்கும் முடியும். அவர் உணர்கின்ற இந்த சாந்தியானது, றூஹில் குத்தூஸ் அவரை தொட்டு விடுவதன் மூலம்தான் வந்தடைகிறது. இந்நூற்றாண்டின் இறைத்தூரின் காரியத்தில் இது முற்றிலும் உண்மையாக இருக்கிறது. தூய றூஹ் அவரை தொடுகிறது. அது ஒரு முறையல்ல பல முறைகள். பூமியில் அவர் வாழும் காலம் வரையில் இந்நிலை தொடர்ந்து வரும். அது அல்லாஹ் மற்று அவனது ஆற்றலுடன் அவரை இனைத்து கொள்கிறது.

தெய்வீக நீரலிருந்து ஒரு இறைமனிதர் தோன்றும் போது சாத்தானால் அவர் தூண்டப்படுவார். ஏனெனில் சாத்தானிய வாசனை என்பது அவரிடம் பிறப்பாக உள்ள ஒன்றாகும். அவரை நபித்துவத்தின் வழியிலிருந்து தடம் மாற்றிக்கொள்ள சாத்தான் கடினமான முயற்சிகளை மேற்கொண்டு வருவான். சில நேரங்களில், இறை தூதர் கூட சாத்தனுடைய இனிமையான பேச்சுகளில் தடுமாறலாம். ஏனெனில் அது இறைவனின் வார்த்தைகள் என தவறாக அவர் புரிந்துக் கொள்வதன் மூலம் நிகழ்கிறது. ஆனால் அதிகமான நாள் அது

நீடிப்பதில்லை ஏனெனில் அல்லாஹ்வின் உண்மையான தூதர் விரைவிலேயே, அவரை அனுப்பிவைத்தவருடன் ஒருங்கிணைந்துவிடுவர். மட்டுமின்றி அவர் அமைதியுடனும் நம்பிக்கையுடனும், சமர்பணத்துடனும் அல்லாஹ்வின் மீது அன்புடனும் தனது இறைபணியுமாக மேலும் முன்செல்வார்.

நிச்சயமாக அல்லாஹ் தேர்ந்தேடுத்த தூதர்களை வழிதவற செய்வதற்க்கு சாத்தானுக்கு ஒரு போதும் முடியாது. எவரையாவது சாத்தான் வழிதவற செய்துவிட்டால், அந்நபர் அந்நிலையில் இறந்துவிட்டால் ஒருபோதும் அவர் அல்லாஹ் தேர்ந்தெடுத்த நபராக இருக்க முடியாது. அதற்கு கடந்த கால பல உதராணங்கள் நமக்கு உள்ளன. அல்லாஹ்வின் பகைவர்களாகிய அத்தகைய பெய்யர்களை அவன் அழித்துக் கொள்வான். எந்த ஓர் அடையாளவும் எஞ்சாத தரத்தில்! அவர்கள் பாவமன்னிப்பைகோரிவிட்டால், பின்னர் அக்காரியம் அல்லாஹ்வின் கரங்களிலாகும். ஆனால் அல்லாஹ்வின் சாபத்திற்கு ஆளாகிய நிலையில் அவர்கள் மரணமடைந்தால், அவர்களின் எந்த ஓர் அடையாளவும் பூமியில் இருப்பதில்லை.

அல்லாஹ் நமது அறிவாற்றலை தூய்மைப்படுத்துவானாக! அவனது படைப்பினங்களின் உண்மையை பகுத்தறிந்திட உதவி புரிவானாக! திருக் குர்-ஆனில் அடங்கியுள்ள உண்மையை பகுத்தறிந்திட அவன் உதவி புரிவானாக! ஜமா அத்தும் அஹீஹில் இஸ்லாமை சார்ந்த ஒவ்வொருவருக்கும் திருக் குர்-ஆனில் அடங்கியுள்ள உண்மையை உணர்வதற்கான உட்பார்வையை அளித்து அருள் புரிவாயாக! திருக் குா-ஆன் என்பது நிச்சயமாக முடிவில்லாத ஞானத்தின் ஊற்றாகிறது. அதன் உண்மையான விளக்கத்தை உணர்ந்துக் கொள்வதன் மூலமும் உங்கள் வாழ்கையை மேலும் ஒளிரவைக்க முடிந்து விடும். எதிர்கால மக்களின் வாழ்கையும் திருக் குர்- ஆன் மூலம் பிரகாசித்துவிடும். இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Translated by:**
*Naib Amir - Azim Ahmad*
*7339689239*

# ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**